# குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று 11 பழங்குடியின மக்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள்

## ஈரோடு மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்



ஈரோடு,ஆக.12-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, கலைஞரின் கனவு இல்லம், இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 330 மனுக்கள் வரப்பெற்றன.

பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கலெக்டர் மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பில், 11 பழங்குடியின மக்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.

இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை பிரியா, தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராஜகோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நூர்ஜஹான் உட்பட அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஊட்டி செயிண்ட் மேரீஸ்ஹில் ரெக்ஸ் மேல்நிலைப்பள்ளியில்

# மதுவிலக்கு மற்றும் போதைப்பொருள் தடுப்பு உறுதி மொழி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் ஏற்பு



ஊட்டி, ஆக.12-

நீலகிரி மாவட்டம் ஊட்டி செயிண்ட் மேரீஸ் ஹில் ரெக்ஸ் மேல்நிலைப் பள்ளியில், மதுவிலக்கு மற்றும் போதைப்பொருள் தடுப்பு உறுதி மொழியினை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், அரசுத்துறை அலுவலர்கள், சுய உதவிக்குழுவினர், பள்ளி மாணவ, மாணவிகள் ஏற்றுக் கொண்டனர்;.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் போதை பொருட்களுக்கு எதிராக பள்ளி ஃ கல்லூரிகளில் காணொலி காட்சியின் வாயிலாக நேற்று நேரடி ஒளிபரப்பு மூலம் உறுதி மொழி ஏற்றுக் கொண்டதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் ஊட்டி செயிண்ட் மேரீஸ்ஹில் ரெக்ஸ் மேல்நிலைப்பள்ளியில், மதுவிலக்கு மற்றும் போதைப்பொருள் தடுப்பு உறுதி மொழியினை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், அரசுத்துறை அலுவலர்கள், சுய உதவிக்குழுவினர், பள்ளி மாணவ, மாணவிகள் ஏற்றுக் கொண்டார்கள்;.

போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும், எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன். போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்' என்ற உறுதிமொழியினை அரசுத்துறை அலுவலர்கள், சுய உதவிக்குழுவினர், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் சுமார் 2000க்கும் மேற்பட்டோர் ஏற்றுக் கொண்டனர்.

மேலும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் காணொளி காட்சி வாயிலாக போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் 'போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு' என்ற நிலையை ஏற்படுத்தும் வகையில், பள்ளி, கல்லூரிகளில் போதை பொருட்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, கோலப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள், சுய உதவிக்குழுவினருக்கு பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதிஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) பழனிச்சாமி, மாவட்ட கல்வி அலுவலர்(பொ) நந்தகுமார், வட்டாட்சியர் சங்கர் கணேஷ், பள்ளி தலைமை ஆசிரியர், மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் பணி: ஊட்டியில் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தொடங்கி வைத்தார்



ஊட்டி, ஆக.12-

நீலகிரி மாவட்டம் ஊட்டி அரசு கலைக்கல்லூரியில், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை சார்பில், தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு, குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் பணியினை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில் தேசியகுடற்புழு நீக்கநாள் ஆகஸ்ட் 11.08.2025 (திங்கட்கிழமை) மற்றும் விடுபட்டவர்களுக்கு 18.08.2025 (திங்கட்கிழமை) அன்றும் அனுசரிக்கப்படுகிறது. இதில் 1 வயது முதல் 19 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும், 20 வயது முதல் 30 வயது வரை உள்ள கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அல்லாத பெண்களுக்கும், மேலும் பள்ளிசெல்லா குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையத்திலும் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்கான மாத்திரை அளவு 1-2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அரை மாத்திரை (200 மி.கி) மாத்திரை உடைத்து இரண்டு ஸ்பூன்களுக்கு இடையில் நன்றாக நசுக்க வேண்டும்.

பின்னர் மருந்தை தண்ணீருடன் கரைத்து குடிக்க கொடுக்க வேண்டும். 2-19 வயது 1 மாத்திரை (400மி.கி), 20 -30 வயது பெண்களுக்கு 1 மாத்திரை இவற்றை நன்றாக கடித்து மென்று சுவைத்து சாப்பிட வேண்டும். உணவு சாப்பிட்ட பிறகு மாத்திரை வழங்க வேண்டும். நோய் வாய்ப்பட்ட குழந்தைக்கு மாத்திரை கொடுக்க வேண்டாம்.

வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, உடல் பலவீனம், பசியின்மை, ஊட்டச்சத்து குறைபாடு, கற்றலில் குறைபாடு, அடிக்கடி குடல்தொற்று, மன வளர்ச்சி குறைவு ஆகியவை குடற்புழு தொற்றின் அறிகுறிகள் ஆகும். உடல் வளர்ச்சி அதிகரிப்பு, குழந்தையின் எடை அதிகரிப்பு, பிறநோய் தொற்றுகளுக்கு எதிர்ப்பு, பள்ளிகளில் சுறுசுறுப்பாக இருக்கமுடியும், சுறுசுறுப்பான வாழ்க்கை முறை, நீண்டநேரம் வேலை செய்யும் திறன் ஆகியவை குடற்புழு நீக்க நன்மைகள் ஆகும்.

மேலும், திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்த்தல், கழிவறைகளை பயன்படுத்துதல், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்தல், காய்கறி பழங்களை கழுவிய பின் உட்கொள்ளுதல், சுத்தமான குடிநீர் சுத்தமான உணவை உண்ணுதல், நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருத்தல், காலணிகள்ஃசெருப்பு அணிதல், உணவுக்கு முன், கழிவறை பயன்படுத்திய பின் சோப்பு போட்டு கைகளை கழுவுதல். உணவு உட்கொள்ளும் முன்பும், பின்பும் கைகளை சுத்தமாக கழுவுதல் போன்றவை புழு தொற்றைத் தடுப்பதற்கான படிகள் ஆகும்.

நீலகிரி மாவட்டத்தில் இம்மாத்திரைகள் அனைத்து அங்கன்வாடி மையங்கள், துணை சுகாதார மையங்களிலும், பள்ளிகளிலும் மற்றும் கல்லூரிகளிலும் 486 அங்கன்வாடி பணியாளர்கள், 216 கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் 416 ஆஷா பணியாளர்கள் மூலம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் முன் ;னிலையில் நேரடியாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1 -19 வயது வரை உள்ள குழந்தைகள் 126130 பேருக்கும் 20 வயது முதல் 45 வயது வரை உள்ள கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அல்லாத பெண்கள் 124977 பேருக்கும் மொத்தமாக 251107 பேரும் பயன் பெறுவர். அல்பெண்டசோல் மாத்திரையை உட்கொள்வதால் குடற்புழுநீக்கம் செய்யப்படுவதுடன் இரத்த சோகை நீங்கி நன்றாக உணவு உட்கொள்ளவும், குழந்தைகள் மற்றும் தகுதி வாய்ந்த பெண்கள் உடல் ஆரோக்கியம் பெறவும் உதவும் என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், உதகை வருவாய் கோட்டாட்சியர் சதிஷ், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.சோமசுந்தரம், ஊட்டி நகர்நல அலுவலர் மரு.சிபி, ஊட்டி வட்டார மருத்துவ அலுவலர் மரு.முருகேசன், ஆசிரியர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டி, குன்னூரில் இன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறும் இடங்கள் அறிவிப்பு

ஊட்டி, ஆக.12-

ஊட்டி, குன்னூரில் இன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

தமிழ்நாடு முதலமைச்சர்; இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார். அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில்,'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

அந்தவகையில், நீலகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமானது கடந்த 15.07.2025 முதல் உதகமண்டலம், கோத்தகிரி,குன்னூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராமஊராட்சிகள் வாரியாக நடைபெற்று வருகிறது.

அதன்படி, இன்று (12.08.2025) குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 23,24 மற்றும் 25-ற்கான முகாம் சிம்ஸ்பார்க் புனித அந்தோணியார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆடிடோரியத்திலும், உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 17,18 மற்றும் 19-ற்கான முகாம் ஓய்டபிள்சிஏ அனந்தகிரி மஹாலிலும், குன்னூர் வட்டம், உபதலை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் வசம்பள்ளம் சமுதாய கூடத்திலும், கோத்தகிரி வட்டம், கொணவக்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் கொணவக்கரை ஊராட்சி அலுவலகத்திலும், உதகமண்டலம் வட்டம், உல்லத்தி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் தலைகுந்தா ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மைதானத்திலும் நடைபெறவுள்ளது. நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் மேற்படி முகாம்களில் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி நடைபெறுவதால் தங்கள் பகுதிக்குச் சென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியில், அமைந்துள்ள முகாம்களில் மட்டும் கலந்துக் கொண்டு கோரிக்கை விண்ணப்பம் அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனவே,உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

மழைநீர் உயிர்நீர்

# ஈரோடு புத்தக கண்காட்சியை பார்வையிட்ட கொங்கு கலை அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகள்




ஈரோடு ஆக 12-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறையின் சார்பில் ஈரோட்டில் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் ஆகஸ்ட் 05 முதல் ஆகஸ்ட 08 வரை, கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் மாணவ-மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இக்கண்காட்சியில் கல்லூரி பாடநூல்கள், பொது அறிவு. போட்டித்தேர்வுகள், தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியம், தன்னம்பிக்கை, புதினங்கள். கவிதைகள் உள்ளிட்ட தலைப்புகளில் நூல்கள் இடம்பெற்றன. கல்லூரித் தாளாளர் . பி. டி. தங்கவேல் வழிகாட்டுதலின்படி கல்லூரி முதல்வர் முனைவர் வாசுதேவன் இப்புத்தக கண்காட்சியை பார்வையிடவும், நூல்களை வாங்குவதற்கும் மாணவ மாணவியர்களுக்கு அறிவுரை வழங்கி அனுப்பி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி நூலகர் முனைவர். செந்தூர் வேல் முருகன் செய்திருந்தார்.

# தமிழகத்தில் வேலை இல்லா திண்டாட்டத்தை கண்டிக்கும் விதமாக ஊட்டியில் அ.தி.மு.க.வினர் நூதன போராட்டம்



ஊட்டி, ஆக.12-

தமிழகத்தில் வேலைஇல்லா திண்டாட்டத்தை கண்டிக்கும் விதமாக தி.மு.க. அரசை கண்டித்து ஊட்டியில் அ.தி.மு.க.வினர் கையில் நீலநிற பட்டை கட்டி நுதான போராட்டம் நடத்தினர்.

நீலகிரி மாவட்ட அ.தி.மு.க. தகவல்தொழில்நுட்ப பிரிவு சார்பில் தமிழகத்தில் வேலைஇல்லா திண்டாட்டத்தை கண்டிக்கும் விதமாக தி.மு.க. அரசை கண்டித்து ஊட்டியில் இளைஞர் கைகளில் நீலநிற பட்டைகளை கட்டி நுதன போராட்டம் நடத்தினர். மத்திய பேருந்து நிலையம் பகுதியில் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் ரஜினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் கப்பச்சி டி வினோத் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இளைஞர்களின் கைகளில் நீலநிற பட்டைகளை கட்டி நூதன போட்டத்தை துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட செயலாளர் வினோத் செய்தியாளர்களிடம் கூறியதாவது-

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு ஆண்டுக்கு சுமார் 10 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என உறுதியளித்திருந்தனர். ஆனால் ஆட்சி பொறுப்பேற்று 4 ஆண்டுகளுக்கு மேலாகியும் இளைஞர்களுக்கு வேலை இல்லாமல் திண்டாடும் சூழல் உருவாகியுள்ளது. எந்த இளைஞரும் நிம்மதியாக இல்லை.

தற்போது அத்தனை இளைஞர்களும் வேலை இல்லா திண்டாட்டத்தினால் போதை பழக்கங்களுக்கு ஆளாகியுள்ளனர். இதனால் இளைஞர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது. இதனை கண்டிக்கும் விதமாக நீலகிரி மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவின் சார்பில் அனைத்து இளைஞர்களின் கைகளில் நீலநிற பட்டை கட்டி நூதன போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்றார்.

இந்த நூதன போராட்டத்தில் இளைஞரணி மாநில இணை செயலாளர் பால நந்தகுமார், மாவட்ட கழக துணை செயலாளர் கோபாலகிருஷ்ணன், நகர செயலாளர் சண்முகம், பேரவை மாவட்ட இணை செயலாளர் தாம்பட்டி சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் குமார், ராஜேஷ், எம்.ஜி.ஆர்.மன்ற மாநில துணை செயலாளர் கண்ணபிரான், கேத்தி பேரூராட்சி செயலாளர் ஜெய், வர்த்தக அணி மாவட்ட துணை தலைவர் ஆனந்த்குமார், பாசறை மாவட்ட செயலாளர் அக்கீம்பாபு எம்.சி., கவுன்சிலர் லயோலா குமார், விசாந்த், வர்த்தக அணி மாவட்ட செயலாளர் சிவக்குமார், தொழில்நுட்ப பிரிவு கோவை மண்டல துணை தலைவர் சதீஷ் போஜன், மாவட்ட துணை செயலாளர் மிதுன், நகர செயலாளர் விஜய், டான் ரங்கநாதன், சதீஷ், பிரதீப், ராஜா, வினோத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில்

# பெண்ணின் உடலில் இருந்து 12 லிட்டர் அளவுள்ள கால்சியம் படிந்த திரவக் கட்டி அகற்றப்பட்டு சாதனை

ஈரோடு: ஆக12-

திருச்செங்கோட்டைச் சேர்ந்தவர் நல்லம்மாள்(வயது 60),இவருக்கு கடந்த ஜூன் மாதத்தத்தில் அதிகமான வயிற்றுவலியால் மூச்சுத்திணறல் காரணமாக நடக்கமுடியாத நிலை ஏற்பட்டது உடனடியாக ஈரோடு கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் சேர்ந்தார். அவரை பரிசோதித்த மருத்துவர் சிடி ஸ்கேன் எடுத்து ஆராய்ந்த போது அவருடைய மண்ணீரல் வீக்கம் ஏற்பட்டு வயிற்றினுள் பெரிய கட்டி உடைந்த நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. உடனடியாக அறுவை சிகிச்சை செய்து காப்பாற்றப்பட வேண்டிய சூழ்நிலையில் இருந்தார்.

பொது அறுவைசிகிச்சை மருத்துவர் என்.வி மோகன் தலைமையிலான குழு அறுவை சிகிச்சை செய்து சுமார் 12 லிட்டர் அளவுள்ள கால்சியம் படிந்த திரவக் கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது. இக்கட்டி மண்ணீரலில் இருந்தே உருவாகி இருந்தது. அறுவை சிகிச்சைக்குப் பின்னர் அவரை தீவிர சிகிச்சைப் பிரிவில் சுவாசக் குழாய் பராமரிப்புடன் கண்காணித்தனர். ஓரிரு நாளில் அவர் உடல் நலம் நன்கு மேம்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து வார்டுக்கு மாற்றப்பட்டார். உடல்நிலை தேறி பின் வழக்கமான உணவு எடுத்துக் கொண்டார்.தற்போது முழு குணமடைந்துள்ளார்.

பொதுவாக இம்மாதிரியான உள் உறுப்பில் ஏற்படும் கட்டியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றும் போது அவருடைய உயிருக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சவாலான விஷயமாகும். எனவே அனைத்து மருத்துவர் குழுவினர் அடங்கிய நம் போன்ற சிறப்பு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என மருத்துவமனை செயல் இயக்குனர் டாக்டர். அருண் என். பழனிச்சாமி தெரிவித்தார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ராகுல், பிரியங்கா காந்தி கைது: ஈரோட்டில் காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்



ஈரோடு ஆக 12-

மத்தியில் ஆளும் பாஜக அரசுக்கு ஆதரவாக தேர்தல் ஆணையம் செயல்பட்டதாகக் கூறி, அதை கண்டித்து டெல்லியில் ஊர்வலம் சென்ற ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தியை கைது செய்ததற்கு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி கடும் கண்டனம் தெரிவித்தது.

இதை கண்டித்து காந்தி அடிகள் சிலை அருகே ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி. திருச்செல்வம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர், முன்னாள் எம்.எல்.ஏ ஆர்.எம். பழனிசாமி, முன்னாள் மாவட்ட தலைவர் ஈ.பி. ரவி, சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் வழக்கறிஞர் ஓ.எம்.ஆர். பழனிவேலு,துணைத்தலைவர் பா.ராஜேஸ் ராஜப்பா, ஏ. மாரியப்பன், வி.கே. செந்தில் ராஜா, எம். ஞான தீபம் மாவட்ட ஊடகப் பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறு பான் மைத் துறை துணைத்தலைவர் கே.என். பாஷா உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர். காங்கிரஸ் கமிட்டி, இளைஞர் காங்கிரஸ், வழக்கறிஞர் பிரிவு, சேவாதளம், நெசவாளர் அணி, ஊடகப் பிரிவு, சிறுபான்மை துறை, மகளிர் அணி போன்ற பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த நிர்வாகிகளும், தொண்டர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# சினிமா cini செய்திகள்

## ரீ ரிலீஸ் ஆகும் 'கேப்டன் பிரபாகரன்'




**வி**ஜயகாந்தின் 100வது படம் 'கேப்டன் பிரபாகரன்'. ஆர்கே செல்வமணி இயக்கத்தில் 1991 ஏப்ரல் 14 தமிழ் புத்தாண்டில் வெளியாகி 34 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில், தற்போது நவீன தொழில்நுட்பங்களுடன் வரும் ஆகஸ்ட் 22 ஆம் தேதி ரீ ரிலீஸ் செய்யப்படுகிறது. இதனை ஒட்டி சமீபத்தில் இந்த படத்தின் டிரைலர் மற்றும் பாடல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இயக்குநர் ஆர்.கே.செல்வமணி, வசனகர்த்தா லியாகத் அலிகான், மன்சூர் அலிகான், நாயகி ரம்யா கிருஷ்ணன் மற்றும் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டணர்.

விழாவில் ஆர்.கே செல்வமணி பேசுகையில், புலன் விசாரணை சமயத்தில் தான் அவரது திருமணம் நடைபெற்றது. அப்போது அந்த கூட்டத்தில் நான் அவருக்காக கொண்டு சென்ற கிப்ட் கீழே விழுந்து விட்டது. அதை எடுக்க முயற்சித்த போது, அதை விடுப்பா நீ தான் எனக்கு மிகப்பெரிய கிஃப்ட் என்று என்னை கட்டி அணைத்தார் கேப்டன் என்றார். விஜய பிரபாகரன் பேசுகையில், கேப்டன் நடித்த 156 படங்களில் இனி ஒவ்வொரு வருடமும் அவர் நடித்த படங்கள் ரீ ரிலீஸ் செய்யப்படும்.

இன்றைய திரைப்பட கல்லூரி மாணவர்களுக்கு கூட அது ஒரு பாடமாக அமையும் என்றார்.

## 'சிறை' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு



**செ**வன் ஸ்கிரீன் ஸ்டுடியோ தயாரிப்பாளர் SS லலித் குமார் தயாரிப்பில், விக்ரம் பிரபு நடிப்பில், அறிமுக இயக்குநர் சுரேஷ் ராஜகுமாரி இயக்கத்தில், உருவாகியுள்ள "சிறை" படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை, இயக்குநர் லோகேஷ் கனகராஜ் வெளியிட்டுள்ளார்.

டாணாக்காரன் இயக்குநர் தமிழ் கதையை எழுத சுரேஷ் ராஜகுமாரி இப்படத்தினை இயக்கியுள்ளார்.

ஒரு காவல் அதிகாரிக்கும், விசாரணைக் கைதிக்குமான பயணம் தான் இப்படத்தின் மையக்கரு. விக்ரம் பிரபு ஜோடியாக அனந்தா நடித்துள்ள இப்படத்தில் LK அக்ஷய் குமார் அறிமுகமாகிறார். இவருக்கு ஜோடியாக அனிஷ்மா நடித்துள்ளார். படப்பிடிப்பு முடிவுற்று தற்போது படத்தின் இறுதிக் கட்ட பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

## 'நாளை நமதே' விமர்சனம்



**சி**வகங்கை மாவட்டத்தில் உள்ள ஒரு பஞ்சாயத்து தொகுதி பட்டியல் சாதியினருக்கானதாக அறிவிக்கப்படுகிறது.

அந்த சாதியை சேர்ந்த நாயகி மதுமிதா தேர்தலில் போட்டியிட முடிவு செய்கிறார். அவருக்கு வழக்கம் போல் பலவித மிரட்டல்கள் வர, அனைத்தையும் கடந்து, தேர்தலில் வெற்றி பெற்றாரா இல்லையா? என்பதை உண்மை சம்பவங்களின் பின்னணியோடு சொல்வதே 'நாளை நமதே படம்'. கதையின் நாயகியாக நடித்திருக்கும் மதுமிதா, படத்தை தன் தோளில் சுமந்திருக்கிறார்.

வேல்முருகன், ராஜலிங்கம், செந்தில் குமார், முருகேசன், மாரிக்கண்ணு, கோவை உமா மற்றும் கிராமத்தினராக நடித்துள்ள நடிகர், நடிகைகள் அனைவரும் மண்ணின் மைந்தர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். பிரவீன் ஒளிப்பதிவு அருமை.. ஹரிகிருஷ்ணனின் இசை படத்துக்கு வலிமை. எழுதி இயக்கியிருக்கும் வெண்பா கதிரேசன், சாதி பிரிவினை மற்றும் சாதி ரீதியிலான ஒடுக்குமுறை பற்றியும் தனிநபர் சுயநலத்திற்காக சாதி எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதையும் அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார். மொத்தத்தில், 'நாளை நமதே' இன்றைக்கு தேவையான ஒரு படைப்பு.

### இலங்கை கடற்படையினரின் கைதை கண்டித்து
## ராமேசுவரத்தில் மீனவர்களின் காலவரைற்ற வேலை நிறுத்த போராட்டம் தொடங்கியது

**ராமேசுவரம், ஆக. 12-**
எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேசுவரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததை கண்டித்து காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.


ராமேசுவரத்தில் இருந்து கடந்த 3 தினங்களுக்கு முன்பு மீன்பிடிக்க சென்ற 7 மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்து விசைப்படகையும் பறிமுதல் செய்தனர். இதையடுத்து கைதான 7 மீனவர்களும் நேற்று முன்தினம் மன்னார் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது மீனவர்கள் 7 பேரையும் வருகிற 21-ந்தேதி வரை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். பின்னர் 7 மீனவர்களும் இலங்கை வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் துறைமுக பகுதியில் அனைத்து விசைப்படகு மீனவர்கள் சங்க ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு விசைப்படகு மீனவர் சங்க ஒருங்கிணைப்பாளர் சேசுராஜா தலைமை தாங்கினார். இதில் மீனவ சங்க பிரதிநிதிகள் எமரிட், சகாயம், கிளாட்வின் ஆல்வின் உள்பட பலர் பங்கேற்றனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு, நாட்டுப்படகுகளுக்கு தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைதாவதற்கு நிரந்தர தீர்வுகாணும் வகையில் பாரம்பரிய கடல் பகுதியில் எந்த பிரச்சினையும் இன்றி மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராமேசுவரத்தில் நேற்று முதல் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாமல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவது எனவும் மீனவர்கள் சார்பில் முடிவெடுக்கப்பட்டது. இதையடுத்து விசைப்படகு மீனவர் சங்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சேசுராஜா தலைமையில், இலங்கை கடற்படையால் கைதான மீனவர்களின் குடும்பத்தினர் நேற்று முன்தினம் ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோனை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அப்போது மீனவர்களின் குடும்பத்தினர், கலெக்டரிடம் சிறையில் உள்ள மீனவர்களை மீட்டு கொண்டுவர வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், இலங்கை கடற்படை சிறை பிடித்த ராமேசுவரம் மீனவர்ளை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேசுவரம் மீனவர்கள் நேற்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். 700-க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மீன் பிடிக்கச் செல்லாமல், கரையோரம் நங்கூரமிட்டு நிறுத்தியுள்ளனர். வேலை நிறுத்தம் காரணமாக நேரடியாகவும், மறைமுகமாகவும் 10,000-க்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு வேலை இழப்பும், நாள் ஒன்றுக்கு பல கோடி ரூபாய் வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது.

## 'மாமரம்' திரைவிமர்சனம்



காதலி செய்த துரோகத்தால் காதலையும், காதலர்களையும் வெறுக்கும் நாயகன் ஜெய் ஆகாஷ், ஒரு மாமரத்தை தனது காதல் சின்னமாக பாதுகாத்து வளர்த்து வருகிறார். மாமரத்துக்கும் நாயகனுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை பல கிளைக்கதைகளுடன் சொல்வதே மாமரம் படம். ஜெய் ஆகாஷ் இளமை, மனநலம் பாதிக்கப்பட்டவர், சாமி பக்தர் என மூன்று விதமான தோற்றங்களில் வருகிறார். நாயகிகளாக மீனாட்சி மற்றும் சந்தியா இருவரும் கவர்ச்சியிலும் நடிப்பிலும் ஸ்கோர் செய்கிறார்கள். பவுல் பாண்டியின் ஒளிப்பதிவுக்காகவும் இசையமைப்பாளர் நந்தாவின் பாடல்களுக்காவும், ஜெய் ஹரிஷாந்தின் பின்னணி இசைக்காவும், ஏ.சி.மணிகண்டனின் படத்தொகுப்புக்கும் அவர்களை நிச்சயம் பாராட்டியே ஆக வேண்டும்.

எழுதி இயக்கியிருக்கும் ஜெய் ஆகாஷ் மிக மிக அரிதான மற்றும் வித்தியாசமான முயற்சியாக இப்படத்தின் திரைக்கதை சொல்லி இருக்கிறார். மொத்தத்தில், மாமரம் வளர வேண்டும்.

## தருண் விஜய் நடிக்கும் 'குற்றம் புதிது' படம்



**ஜி**.கே.ஆர் சினி ஆர்ட்ஸ் தயாரிப்பில் நோஹா ஆம்ஸ்ட்ராங் இயக்கத்தில், அறிமுக நடிகர் தருண் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள படம் குற்றம் புதிது. நாயகியாக சேஷ்விதா கனிமொழி நடிக்க, மதுசூதன் ராவ், நிழல்கள் ரவி, ராமச்சந்திரன் துரைராஜ், பாய்ஸ் ராஜன், பிரியதர்ஷினி ராஜ்குமார் ஆகியோர் முக்கிய பாத்திரத்தில் நடித்திருக்கிறார்கள். சமீபத்தில் வெளியான டீசர் ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருப்பதோடு, டீசரில் நாயகன் தருண் விஜயின் நடிப்பும், உடல் மொழியும் கவனம் ஈர்த்துள்ளது.

படம் பற்றி இயக்குனர் நோஹா ஆம்ஸ்ட்ராங் கூறுகையில், இந்த படத்திற்காக நாயகன் தருண் விஜய் பல்வேறு பயிற்சிகளை எடுத்துக் கொண்டார். குறிப்பாக கொரில்லா போல் நடப்பதற்காக மூன்று மாதங்கள் சிற்றபு பயிற்சி எடுத்தார். நிச்சயம் அவரது நடிப்பு பாரட்டு பெறும் என்றார். நாயகன் தருண் விஜய் கூறுகையில், நடிகராக வேண்டும் என்பதற்காக கல்லூரி படிக்கும் போதே, நடிப்பு, நடனம், ஆக்ஷன் ஆகியவற்றில் பயிற்சி பெற்றறுள்ளேன் என்று கூறினார். இப்படத்தின் படப்பிடிப்பு மற்றும் அனைத்து பணிகளும் முடிவடைந்து இம்மாதம் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## 'காத்துவாக்குல ஒரு காதல்' விமர்சனம்



**நா**யகன் மாஸ் ரவியும், நாயகி லட்சுமி பிரியாவும் உயிருக்கு உயிராக காதலிக்கிறார்கள். ஒரு நாள் ரவி திடீரென்று காணாமல் போகிறார். ரவுடி கும்பலில் ஒருவராக ரவியை மீண்டும் கண்டு பிடிக்கிறார் லட்சுமி பிரியா, ஆனால், அவரோ லட்சுமி பிரியாவை கண்டு கொள்ளாமல் கடந்து செல்கிறார். மாஸ் ரவியின் இந்த மாற்றத்திற்கு காரணம் என்ன என்பதை பல ஃபிளாஷ் பேக் கலந்து சொல்வதே 'காத்துவாக்குல ஒரு காதல்'.

படத்தை இயக்கி, நாயகனாக நடித்திருக்கும் மாஸ் ரவி, மென்மையான மற்றும் அதிரடியானவர் என இரண்டு கெட்டப்புகளில் அசத்தியிருக்கிறார். நாயகி லட்சுமி பிரியா திறமையான நடிப்பு மூலம் கவர்கிறார். மற்றொரு நாயகி மஞ்சு நடிப்பும் அசத்தல். கல்லூரி வினோத், சூப்பர் சுப்பராயன் சாய் தீனா ஆதித்யா பாஸ்கர் மற்றும் தங்கதுரை வரும் காட்சிகள் சிரிக்க வைக்கிறது. இசைமைப்பாளர்கள் ஜிகேவி மற்றும் மிக்கின் அருள்தேவ் இசை ஓகே ரகம். மொத்தத்தில், 'காத்துவாக்குல ஒரு காதல்' சுமார் ரகமே.



**பொற்கைபாண்டியன் கவிதா மண்டலம் சார்பில் காரியபட்டியில் சுரேஷ் ராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில் முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் நூலினை வழங்க அ.தி.மு.க.மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார்.**



**அ.தி.மு.க. இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறைக்கு புதிதாக உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகளில், சேலம் புறநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி ஆகிய 8 சட்டமன்றத் தொகுதிகளில் இருந்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாசறை உறுப்பினர்களாக சேர்ந்துள்ள நிலையில், கட்சி பொதுச் செயலாளர், எடப்பாடி பழனிசாமியை அவரது இல்லத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 100 உறுப்பினர்களுக்கு அட்டைகளை வழங்கினார்.**

## திண்டுக்கல் மாவட்டம் கொழுமங் கொண்டானில் ரேக்ளா பந்தயம் அமைச்சர் துவக்கி வைத்தார்



**ஒட்டன்சத்திரம், ஆக. 12-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியம் கொழும்பு கொண்டானில் முத்தமிழ்அறிஞர் கலைஞரின் 102-வது பிறந்தநாளை முன்னிட்டு ரேக்ளா பந்தயத்தை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி கொடிய சைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணியன், பொன்ராஜ், தங்கம், பொதுக் குழு உறுப்பினர் வெங்கிடுசாமி, முன்னாள்மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



**மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து தெற்கு 1- ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் அதன் பகுதி செயலாளர் எம்.எஸ்.செந்தில்குமார் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே ராஜு எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார்.இதில் மகளிர் அணி செயலாளர் பா வளர்மதி பொறுப்பாளர் ஆனிமுத்து மற்றும் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர். செல்வகுமார், சுகந்தி அசோக், நூர்முகமது, கோட்டைசாமி, ஜாகீர், ஷோபியா பிச்சைமணி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

### அருப்புக்கோட்டையில்
## வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர் கூட்டம்

**விருதுநகர், ஆக. 12-**
விருதுநகர் மாவட்டத்தில், அருப்புக்கோட்டை வருவாய் கோட்டத்தில் இன்று (12.08.2025) நடைபெறயிருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக மாற்றம் செய்யப்பட்டு, வருகிற 14-ம் தேதி அன்று அருப்புக்கோட்டை வருவாய் கேட்டாட்சியர் தலைமையில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. எனவே, அருப்புக்கோட்டை கோட்ட அளவிலான விவசாய பெருமக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தப்பட்ட பொதுவான கோரிக்கைகளை நேரடியாக மனு மூலம் தெரிவித்து பயன்பெறலாம் அருப்புக் கோட்டை வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

கண் தானம் செய்வீர்

## போதை பொருள் தடுப்பு உறுதிமொழி

**திண்டுக்கல், ஆக. 12-**
திண்டுக்கல் ஆர்.வி.எஸ். பொறியியல் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு நிகழ்ச்சியின் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு காவல்துறை, ஆர்.வி.எஸ் கல்லூரி யின் நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் காவல்துறையின் சார்பாக செல்வராஜ் மற்றும் லகுமணன், சார்பு காவல் ஆய்வாளர்கள் தாடிக்கொம்பு மற்றும் கல்லூரி யின் சார்பாக இயக்குனர். எஸ்.மைதிலி, முதல்வர். முனைவர் எஸ்.குகராஜா தலைமையில் மாணவ, மாணவியர் உறுதி மொழி ஏற்றனர்.

இந்நிகழ்ச்சியை என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர்கள் வித்யாதேவி மற்றும் ஒய்.ஆர்.சி. ஒருங்கிணைப்பாளர் கவிதா ஒழுங்கு செய்தனர். இந்நிகழ்ச்சியில் போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை செய்ய அரசுக்கு துணை நிற்போம் என உறுதிமொழி எடுக்கப்பட்டது.

